**அன்புள்ள வாடிக்கையாளருக்கு,**

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள நுகர்வோர் சாசனத்தின் கீழ் கோரப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், நாங்கள் வழங்குகின்ற உங்களுக்குத் தேவையான மற்றும் உங்களுக்குப் பொருத்தமான வங்கிக் கணக்குத் திட்டங்கள்/சேவைகளைத் தேர்ந்தெடுக்கும் போது உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களை [KFD] நாங்கள் தயாரித்துள்ளோம்.

முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணமானது [KFD], நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியில் கிடைக்கும் வணிக வங்கி [சில்லறை மற்றும் SME வங்கித் துறை] தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் விரிவான விளக்கத்தை வழங்குகிறது.
எவ்வாறாயினும், பின்வரும் முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களில் (KFD) யில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களானது சட்டத்தில் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் வங்கியின் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக திருத்தத்திற்கு உட்பட இடமுள்ளது என்பதைக் கருத்தில் கொள்ளவும். வங்கியின் அவ்வாறான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களில் (KFD) இல் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து வங்கி அது தொடர்பாக உங்களுக்கு அறிவிக்கும் என்பதைக் கவனிக்கவும்.
உங்களுக்கு மேற்கொண்டும் தகவல் தேவைப்பட்டால், கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொடர்பு கொள்ளவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள உங்களின் ஏதும் கணக்குகள் தொடர்பான ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், முறைப்பாடுகளைக் கையாளும் அதிகாரி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பீ.எல்.சீ, இலக்கம் 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்ற முகவரிக்கு முறைப்பாடு உள்ளடக்கப்பட்ட சுருக்கமான ஓர் அறிக்கையை எழுத்தில் அனுப்பி வைக்கவும். அல்லது [+94(0)114711411] எனும் தொலைபேசி இலக்கம் / [customerservice@nationstrust.com] எனும் மின்னஞ்சல் மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும். நாங்கள் உங்களுக்கு விரைவில் பதிலளிக்கத் தயாராக உள்ளோம்.

| கணக்கு பற்றிய விபரங்கள் | வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கின்றசலுகைகள் உட்பட ஊக்கத்தொகைகள் மற்றும் நன்மைகள் | கட்டண வகைகளும் ஏனைய வங்கி அறவீடுகளும் வட்டிகளும் | ஒரு கணக்கைத் தொடங்குவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கியமான நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|---|---|
| **நேஷன்ஸ் வியாபார முதலீட்டுத் திட்டம்** | | | | |
| இந்தத் திட்டமானது, வாடிக்கையாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் தங்கள் வருமானத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, இணக்கத்திற்கு வந்துள்ள எதிர்காலத் திகதி ஒன்றில் ஒட்டு மொத்தத் தொகை ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக விசேட சேமிப்புக் கணக்கு ஒன்றில் வைப்புச் செய்ய வசதி செய்து கொடுக்கிறது. | இலக்குக் காலவரை முழுவதும் உத்தரவாதமளிக்கப்பட்ட வட்டி விகிதம். | ஒரு கணக்கை நிச்சயிக்கப்பட்ட காலவரை பூரணமடைய முன்னர் மூடினால், முடிவுறுத்தல் சேதமாக கட்டணம் ஒன்று அறவிடப்படும்.<br><br>முதலீட்டுத் திட்டத்தை 2 ஆண்டுகளில் அல்லது அதற்கு முன் மூடினால் - நேஷன்ஸ் சேவர் வட்டி விகிதத்தினை ஒத்த வட்டி விகிதத்தில் கட்டணம் அறவிடப்படும்.<br><br>முதலீட்டுத் திட்டத்தை 2 ஆண்டுகளுக்குப் பிறகு மூடினால் - நேஷன்ஸ் சேவர் வட்டி விகிதத்துடன் 1% சேர்க்கப்பட்டு கட்டணம் அறவிடப்படும். | (1) வாடிக்கையாளர் ஏற்கனவே ஒரு வியாபார நடைமுறைக் கணக்கைத் திறக்கவில்லை என்றால், அவ்வாறான ஒரு கணக்கையும் சேமிப்புக் கணக்கு ஒன்றையும் (நேஷன்ஸ் வியாபார முதலீட்டுத் திட்டக் கணக்கு) திறக்க வேண்டும்.<br><br>(2) சேமிப்புக் கணக்கிற்கு இணங்கியுள்ள தவணைப் பணத்தை குறிப்பிட்ட கால இடைவெளியில் செலுத்துவதற்கான நிலையான கட்டளை ஒன்றை நடைமுறைக் கணக்கிற்கு வழங்க வேண்டும். | • பதிவுசெய்யப்பட்ட வணிக நிறுவனங்கள் மட்டுமே இந்தக் கணக்கைத் திறக்க முடியும்.<br>• கணக்குப் புத்தகத்துக்குப் பதிலாக வாடிக்கையாளருக்கு ஒரு முதலீட்டு கணக்குக் கூற்று வழங்கப்படும்.<br>• கணக்கிற்கு அரசாங்க வரிகள் ஏற்புடையதாகும்.<br>• நாளாந்த நிலுவையின் அடிப்படையில் வட்டி கணக்கிடப்படும் என்பதுடன் அது மாதாந்த அடிப்படையில் கணக்கில் வரவு வைக்கப்படும்.<br>• சேமிப்புக் கணக்கிலிருந்து பணம் எடுப்பதற்கோ அல்லது பகுதியளவு மீளப் பெறுதல்களுக்கோ அனுமதி கிடையாது.<br>• இணங்கியுள்ள காலவரைக்கு முன்னர் கணக்குகளை மூடினால் அபராதத் தொகை ஒன்று அறவிடப்படும். |

- இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, அனைத்து பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் நேஷன்ஸ் மேக்ஸ் போனஸ் சேமிப்பு கணக்கிற்கு ஏற்புடையதாகும் என்பதுடன் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகளானது பொதுவான வியாபார நிபந்தனைகளின் கீழுள்ள https://www.nationstrust.com/images/pdf/general-business-conditions pdf இல் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அவ்வப்போது திருத்தத்திற்கு உட்படும் கட்டண வகைகள் மற்றும் வங்கியின் ஏனைய கட்டணங்கள் ஆகியன வங்கியின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.
- இந்த வங்கியானது, ரூ. 1,100,000/- வரை வைப்பிலிடுகின்ற ஒரு வைப்பீட்டாளருக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற இலங்கை மத்திய வங்கியின் (CBSL) கீழ் இயங்குகின்ற இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் (SLDIS) ஓர் உறுப்பினராகும்.
- இந்த ஆவணத்தின் ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ்ப் பிரதிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்பட்டால், இதன் ஆங்கிலப் பிரதியே செல்லுபடியானதாகக் கருதப்படும்.